# APPENDIX E: TAMIL ETHICS CONSENT FORM

UNIVERSITY of GUELPH
CHANGING LIVES IMPROVING LIFE

# மாற்று குடிநீர் முறை திட்டம்
# ஆய்வில் பங்கேற்க ஒப்புதல்

## குழுக் கலந்தாய்வு / நேர்க்காணல் பகுதி
## மயிலை பாலாஜி நகர் கூட்டு சுகாதார பாதிப்பு மற்றும் ஆரோக்கியத்திற்கான ஆய்வு

குளேப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்வி நிலையம், நீர்நிலை பொறியியல் துறையைச் சார்ந்த சையது இம்ரான் அலி என்பவரால் நடத்தப்படும் ஆய்வில் பங்குபெற உங்களை கேட்டுக் கொள்கிறோம். இந்த ஆய்வின் முடிவுகள் 'டாக்டர்" பட்டம் பெறுவதற்கெனச் சமர்ப்பிக்கப்படும் விளக்கக் கட்டுரைக்கு உதவுகிறது. கனடாவில் உள்ள ஒட்டோவாவின் உலகளாவிய முன்னேற்ற ஆய்வு மையத்தால் ஆரம்பிக்கப்பட்ட 'நகர்புற வறுமை மற்றும் சுற்றுச்சூழல் நிகழ்ச்சியின்" உதவியுடன் நடத்தப்படுகிறது.

இந்த ஆய்வு பற்றிய உங்களின் சந்தேகங்களுக்கு மற்றும் புகாருக்கு, தயங்காமல் கீழ்க்கண்ட தொடர்பு எண்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

1) சையது இம்ரான் அலி, ஆராய்ச்சியாளர், 917-648-5940 (இந்தியா).
2) முனைவர் கெவின் ஹால், ஆராய்ச்சி மேற்பார்வையாளர், 1-519-824-4120 விரிவு 53081 (கனடா).

**ஆய்வின் நோக்கம்:**

இந்தியாவில் நகர்புற குடிசை பகுதிகளில் உள்ள தண்ணீர் சார்ந்த நோய்களை குறைப்பதற்காக மற்றும் மாற்று மாதிரி பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதியினை மதிப்பீடு செய்யும் மற்றும் மக்கள் பங்கேற்பை கொண்டு முன்னேற்றத்தை உருவாக்குவதும் இந்த மாற்று குடிநீர் முறை திட்டத்தின் நோக்கம் ஆகும்.
இந்தக் குழுக் கலந்தாய்வு / நேர்க்காணலின் நோக்கமானது சுகாதார குடிநீர் முறையை பயன்படுத்துபவர்களின் எண்ணங்களை ஆராய்வது ஆகும். இதில் குடிநீர் சுத்திகரிப்பு வடிகாலின் சிறப்பம்சங்கள் மற்றும் வடிவமைப்பின் தேவைகளும் அடங்கும்.

**செயல்முறை:**

நீங்கள் தானாக முன்வந்து இந்த ஆய்வில் பங்கேற்க விரும்பினால், நாங்கள் பின்வரும் காரியங்களை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்:

தயவு கூர்ந்து கலந்தாய்வு நடத்துபவரின் கேள்விக்கு உங்கள் அறிவில் சிறந்த பதில்களை கூறவும். நீங்கள் சுதந்திரமாக பேசுங்கள். நீங்கள் குறிப்பான முறையில் பேசுவதற்க்கோ அல்லது பேசாமல் இருப்பதற்கோ வற்புறுத்தப்படுவதாக நினைக்காதீர்கள். உங்களின் கருத்துக்கள் எங்களுக்கு முக்கியம். இதில் சரியான மற்றும் தவறான பதில்கள் கிடையாது. நேர்மறை மற்றும் எதிர்மறை கருத்துக்களும் இணையான முக்கியத்துவம் வாய்ந்தது. நீங்கள் எவ்வளவு கூறவேண்டும் அல்லது எவ்வளவு கூறவேண்டாம் என்று நீங்கள் முடிவு செய்யலாம். நீங்கள் இறுதியில் ஒரு முடிவுக்கு வரவேண்டும் என்று எதிர் பார்க்கத் தேவையில்லை. தயவு கூர்ந்து கலந்தாய்வின் போது நீங்கள் எந்த தருவாயிலும் சுதந்திரமாக கேள்வி கேட்கலாம். மேலும். மற்றவர்களை பேசுவதற்க்கு அனுமதியுங்கள் மற்றும் மற்றவர்கள் பேசும் போது இடையூறு செய்யாதீர்கள். ஒரு தருணத்தில் ஒருவர் மட்டுமே பேசுங்கள் அப்போது தான் நாங்கள் தெளிவாக பதிவு செய்ய முடியும். இந்தக் கலந்தாய்வு 1 மணி 30 நிமிடங்கள் இருக்கும். இந்தக் கலந்தாய்வினை பதிவு செய்யும் இயந்திரம் மூலம் பதிவு செய்வோம். உங்கள் பங்கேற்ப்பினை எதிர் வரும் ஆராய்ச்சி நிகழ்ச்சியில் எதிர் நோக்குவோம்.

**ஏற்புடைய பாதிப்புகள் மற்றும் சங்கோஜங்கள்:**

இந்தக் கலந்தாய்வில் கேட்கப்படும் சில கேள்விகள் உங்கள் சமுதாயத்தின் நம்பிக்கை மற்றும் ஒற்றுமை பற்றிய உங்களின் யூகங்களைப் சார்ந்து இருக்கும். அனைத்து பதிவுகளும் முடிந்த அளவிற்கு உங்களின் தனிமனித சுதந்திரத்தை உறுதிப்படுத்தும் மற்றும் அனைத்து பதிவுகளும் ஐஐடியில் பாதுகாப்பான இடத்தில் சேகரிக்கப்படும். இதனை எங்கள் ஆராய்ச்சி பணியாளர்கள் மட்டும் தான் உபயோகப்படுத்துவார்கள். பங்கேற்பாளர்கள் அவர்களின் பெயரின் மூலம் அடையாளம் காணப்படமாட்டார்கள் மற்றும் பதிவுகளும் பாதுகாப்பாக வைக்கப்படும்.

**<u>பங்கு பெறுபவர்க்கு / சமூகத்திற்கு ஏற்படக்கூடிய பயன்கள்:</u>**

பங்கு பெறுபவருக்கு இந்த ஆய்வு பணியின் மூலம் நேரடியாக பயன் இருக்காது. இருப்பினும், இந்த ஆய்வின் மூலமும் மற்றும் ஆய்வு செயல்பாடுகளின் மூலமும் கோரப்படும் விவரங்கள் பாதுகாப்பான குடிநீர் முறைக்கு வழிவகுக்கும். அது மயிலை பாலாஜி நகரில் வசிக்கும் மக்களின் குடிநீர் தன்மையை தரமானதாக்கும். இந்த ஆய்வு பணியில் கண்டுபிடிக்கப்படும் கண்டுபிடிப்புகள் அரசாங்கத்திற்கு தெரிவிக்கப்படும். மற்றும் அது சென்னை மற்றும் இந்தியாவில் மற்ற இடங்களில் தூய மற்றும் பாதுகாப்பான குடிநீர் திட்டம் உருவாக்குவதற்கு வழிவகுக்கும்.

**<u>பங்கு பெறுவதற்கு தொகை:</u>**

ஆய்வினில் கலந்து கொள்பவருக்கு எந்தவிதமான தொகையும் கொடுக்கப்படமாட்டாது.

**<u>இரகசியத்தன்மை:</u>**

இந்த ஆய்வின் மூலம் பெறப்படும் விவரங்களை இரகசியமாக பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். பூர்த்தி செய்யப்பட்ட வினாத்தாள்கள் அனைத்தும் ஐ.ஐ.டி. பேராசிரியர் அறையில் பத்திரமாக பூட்டி வைக்கப்படும். மற்றும் அதனை திட்ட அலுவலர்கள் மட்டும் உபயோகப்படுத்துவார்கள். இந்த ஆவணங்கள் திட்டம் முடிவுறும் நாளான மே 31, 2012 பிறகு 6 மாத காலம் பாதுகாக்கப்படும். அதன் பிறகு அது அழிக்கப்பட்டுவிடும்.

**<u>பங்கேற்பு மற்றும் வாபஸ்:</u>**

நீங்கள் இந்த ஆய்வினில் பங்கேற்பதா? இல்லையா? என்று முடிவு செய்யலாம். நீங்கள் தானாக முன்வந்து ஆய்வினில் பங்கேற்றால், நீங்கள் எப்போது வேண்டுமானாலும் எந்தவித இடையூறுமின்றி வெளியேறலாம். நீங்கள் உங்கள் விவரங்களை ஆய்வினில் இருந்து எடுத்துவிடலாம். நீங்கள் பதில் கூற விருப்பப்படாத கேள்விகளை நிராகரித்துவிட்டும், நீங்கள் தொடர்ந்து ஆய்வினில் இருக்கலாம். ஆய்வு மேற்கோள்பவர் சூழ்நிலைகளை காரணமாக கொண்டு ஆய்வினில் இருந்து உங்களை விளக்கலாம்.

**<u>ஆய்வில் பங்குபெறுபவரின் உரிமைகள்:</u>**

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் ஒப்புதலை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் மற்றும் ஆய்வினில் இருந்து எந்தவித அபராதமுமின்றி விலகிக் கொள்ளலாம். நீங்கள் இந்த ஆய்வினில் பங்கேற்பதால் எந்தவிதமான உரிமையோ, சட்ட உரிமையையோ விட்டுக் கொடுக்கப்போவதில்லை. இந்த ஆய்வு குளேப் பல்கலைக்கழகத்தின் ஒழுக்க நெறிமுறை குழுவின் மூலம் சரிபார்க்கப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு பங்கேற்பவரின் உரிமையை பற்றி அறிய விரும்பினால், தொடர்பு கொள்க.

ஆய்வு ஒழுக்கமுறை ஒருங்கிணைப்பாளர்,
குளேப் பல்கலைக்கழகம்
437, பல்கலைக்கழக மையம்,

குளேப், OW N1G 2W1
தொலைபேசி: (519) 824-4120, விரிவு: 56606
இமெயில்: sauld@voguelph.ca
பேக்ஸ்: (519) 821-5236

சையது இம்ரான் அலி
திட்ட ஒருங்கிணைப்பாளர், மாற்று குடிநீர் முறை திட்டம்
RM 30, EWRE
சிவில் இன்ஜினியரிங் துறை,ஐ.ஐ.டி. மெட்ராஸ்,
சென்னை - 600 036.
தொலைபேசி: 91-917-648-5940
இமெயில்: alis@uoguelph.ca

**<u>ஆய்வில் பங்கேற்பவரின் கையொப்பம் / சட்டரீதியான பிரதிநிதி:</u>**

'மாற்று குடிநீர் முறைதிட்டம் - குழுக் கலந்தாய்வு / நேர்க்காணல் பகுதி மயிலை பாலாஜி நகர் சுகாதார பாதிப்பு மற்றும் ஆரோக்கியம்" பற்றிய ஆய்வினை பற்றி கீழ்க்கண்ட விவரங்களை படித்தேன். நான் திருப்தியடையும் அளவில் எனது கேள்விகள் பதிலளிக்கப்பட்டது. மற்றும் நான் இதில் பங்குபெற ஒப்புக் கொள்கிறேன். எனக்கு இதன் நகல் கொடுக்கப்பட்டது.

.......................................................
பங்குபெறுபவரின் பெயர்

.........................................................
சட்டரீதியான பிரதிநிதி (ஏதேனும் இருப்பின்)

.......................................................... .................
பங்கு பெறுபவரின் கையொப்பம் தேதி
(அ) சட்டரீதியான பிரதிநிதி

(பங்கேற்பாளராக சரியான முறையில் ஒப்புதல் தரமுடியவில்லையென்றால் மட்டும் பெயர் மற்றும் சட்டரீதியான பிரதிநிதியின் கையொப்பம் பெறவும். பங்கேற்பவர் ஒப்புதல் அளிக்க தெளிவாக இருந்தால் இது தேவையில்லை).

**<u>சாட்சி:</u>**

............................................
சாட்சியின் பெயர்

............................................ ...............................
சாட்சியின் கையொப்பம் தேதி

(ஆய்வு செய்பவர் சாட்சியாகமாட்டார். ஆனால் யாரேனும் இல்லையெனில் ஆய்வாளர் சாட்சியாக மாறலாம்).